# 10-01-2025 செய்தி

## தகவல் கேட்டால் இ – மெயிலில் ஓ.டி.பி., அனுப்புவதா?

- ஆர்.டி.ஐ., சட்டமானது, அரசின் பல்வேறு துறைகளில் வெளிப்படை தன்மையை உறுதி செய்ய, ஊழலற்ற நேர்மையான நிர்வாகம் நடக்கிறது என்பதை தெரிந்து கொள்ள, தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க, கொண்டு வரப்பட்டது.
- பணியாளர், பயிற்சி துறையின் கீழ் செயல்படும் இச்சட்டம், பிரதமர் மோடியின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ளது.இதன் வாயிலாக அரசிடம் தகவல் பெற விரும்புவோர்,10 ரூபாய் – கட்டணம் செலுத்தி, இணையதளம் வாயிலாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.
- சம்பந்தப்பட்ட துறை தலைமைக்கு கேள்விகளை அனுப்பினால், 30 நாட்களுக்குள் பதில் தர வேண்டும்.இணையதளத்தில் பதிவு எண், மொபைல் போன் எண் போன்றவற்றை உள்ளீடு செய்து, கேள்விகளின் நிலை, பதில் போன்றவற்றை அறியலாம்
- இந்தாண்டு முதல் ஆர். டி.ஐ., இணையதளத்தில், இ–மெயில் முகவரி வாயிலாக, ஓ.டி.பி., பெறும் புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. வங்கி உள்ளிட்ட மற்ற துறைகளில், போனில் ஓ.டி.பி., பெறும் வசதி உண்டு. அவை உடனே வந்து விடும்; தாமதமானாலும் குறிப்பிட்ட நொடிகள் கழித்து மறுபடியும் ஓ.டி.பி., பெறும் வசதி கிடைக்கும்.
- தற்போது ஆர்.டி.ஐ., தளத்தில் கொண்டு வரப்பட்டுள்ள முறையில், இ–மெயில் முகவரிக்கு, ஓ.டி.பி., அனுப்பப்படுகிறது. ஆனால், எப்போது வரும் எவ்வளவு நேரமாகும் என்று தெரியவில்லை.
- இ–மெயில் முகவரியை பார்த்தால், எந்த ஒரு ஓ.டி.பி., யும் வரவில்லை. நாம் கேட்ட கேள்விகளின் நிலை என்ன என்பது குறித்த எந்த ஒரு தகவலும் தெரியாமலேயே போவதாலும், இ–மெயில் முகவரி இருப்பவர்கள் மட்டுமே இதை பயன்படுத்த முடியும் என்பதாலும், இச்சட்டம் நீர்த்துப் போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மீண்டும் பழைய நடைமுறையை அமல்படுத்த வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## ‘கிரீமிலேயர்’ பிரிவினரை இடஒதுக்கீட்டில் இருந்து நீக்குவது குறித்து மத்திய, மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தல்

- இடஒதுக்கீடு பயன்களை ஏற்கெனவே பெற்று முன்னேறிய ‘கிரீமிலேயர்’ பிரிவினரை இட ஒதுக்கீடு சலுகையில் இருந்து நீக்கும் முடிவை மத்திய, மாநில அரசுகள்தான் எடுக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் மீண்டும் வலி யுறுத்தியுள்ளது.
- பட்டியலினத்தவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான பிரிவை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களுக்குள் உட் பிரிவை வகைப்படுத்த அனுமதிக்க முடியாது என உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கடந்த 2004-ம் ஆண்டு தீர்ப்பளித்தது.
- இந்த தீர்ப்பை கடந்தாண்டு ரத்து செய்த உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு. ”சமூக ரீதியாக, கல்வி ரீதியாக மிகவும் பின்தங்கியிருப்பவர்களின் மேம்பாட்டுக்காக, பட்டியலினத்தவருக்குள் உட்பிரிவுகளை வகைப்படுத்தும் அதிகாரம் மாநிலங்களுக்கு உள்ளது” என தீர்ப்பளித்தது.
- இந்த அரசியல்சாசன அமர்வில் இடம்பெற்ற நீதிபதி கவாய் தனியாக ஒரு தீர்ப்பு வழங்கினார். அதில் எஸ்.சி. எஸ்.டி. பிரிவினரில் இடஒதுக்கீட்டால் ஏற்கெனவே பயன் அடைந்து முன்னேறிய ’கிரீமிலேயர்’ பிரிவினரை கண்டறிந்து, அவர் களுக்கு மீண்டும் இட ஒதுக்கிட்டு சலுகையை மறுக்கும் வகையில் மாநில அரசுகள் கொள்கையை உருவாக்க வேண்டும்” என்றார்.
- இந்த உத்தரவை உச்ச நீதிமன்றம் பிறப்பித்து 6 மாதங்கள் ஆகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் கிரீமிலேயரை அடையாளம் காணும் கொள்கையை அரசுக் கும் உச்ச நீதிமன்றம் வலியுறுத்த வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதிகள் பி.ஆர்.கவாய் மற்றும் அகஸ்டின் ஜார்ஜ் மாசிஹ் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

## உலகின் வலிமையான பாஸ்போர்ட் சிங்கப்பூர் நம்பர் 1 இந்தியா 85வது இடம்

- ஆண்டு தோறும் உலக அளவில் எந்த நாட்டு பாஸ்போர்ட் மிகவும் வலிமையாக உள்ளது என்று ஹென்லி பாஸ்போர்ட் குறியீடு அறிக்கை வெளியிடுகிறது.
- இந்தியா 2006ல் 71வது இடத்தில் இருந்தது. 2021ல் 90வது இடத்திலும், 2024ல் 80வது இடத்திலும் இருந்தது. ஆனால் 2025ல் 85வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

## ஏ.ஐ. உங்களை எப்படி ஏமாற்றுகிறது?

- இன்றைக்கு நாம் பயன்படுத்தும் செயலிகள் அனைத்துக்கும் இருக்கும் ஒரு பொதுவான விஷயம் செயற்கை நுண்ணறிவு (AI), பெருநிறுவனங்கள் நினைக்கும் முடிவை நம் மீதே திணித்து அது சார்ந்த முடிவை நன்மையே எடுக்கவைக்கும் அளவுக்குச் செயற்கை நுண்ணறிவு பிரம்மாண்டமாக வளர்ந்திருக்கிறது.

**நோக்கப் பொருளாதாரம்**

- இங்குதான் ஆய்வாளர்கள் 'நோக்கப் பொருளாதாரம்' (Intention Economy) என்னும் கோட்பாட்டை முன்வைக்கிறார்கள்.
- அதாவது, இந்தச் சமூக வலைதள நிறுவனங்களும் இணையச் சேவைச் செயலிகளும் உங்களின் இணைய நடவடிக்கைகள் (Digital Behaviour) அனைத்தையுமே சேகரிக்கின்றன.
- சேகரித்த தகவலைச் செயற்கை நுண்ணறிவு மென்பொருளுக்குக் கொடுத்துப் பகுப்பாய்வு செய்கின்றன. அதன் மூலம் உங்கள் நோக்கங்களைக் கண்காணித்து, பின்பு நிறுவனங்களுக்கு நல்ல லாபத்துக்கு விற்கின்றன.
- நீங்கள் இணையத்தில் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையும் உங்கள் விருப்பங்களின் குரலாக இருக்கிறது;
- செயற்கை நுண்ணறிவு அவற்றைக் கேட்டு உங்கள் எதிர்கால உள்நோக்கங்களைக் கணிக்கிறது.
- இந்தக் கணிப்புகள் பெரும் லாபம் ஈட்டித் தருகின்றன. இதைத்தான் நோக்கப் பொருளாதாரம் என அழைக்கிறோம்.
- வருங்காலத்தில் ஒருவரின் இணையப் பயன்பாட்டை வைத்து, அவரின் நோக்கத்தைக் கணிப்பதும், அதைச் சந்தையில் லாபத்துக்கு விற்பதும் மிகப் பெரிய பொருளாதாரமாக மாறும்.
- இதற்கான நிபுணர்கள், மென்பொருள்கள், வன்பொருள்கள், தொழில்நுட்பத்துக்கு மிகப்பெரிய தேவை உருவாகும். ஆனால், நோக்கப் பொருளாதாரம் என்பதே ஆபத்து, பெருநிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் இதைத் தவறாகப் பயன்படுத்துகின்றன என்ற குரல்கள் எழத் தொடங்கியிருக்கின்றன.
- "நோக்கப் பொருளாதாரத்தை அரசு உடனே கட்டுப்படுத்தி நெறிப்படுத்த வேண்டும் இல்லை என்றால் மக்களின் ஆசை, நோக்கம், விருப்பம் எல்லாம் பெருநிறுவனங்களின் லாப வேட்டைக்குப் பலியாகும் வாய்ப்புள்ளது".
- செயற்கை நுண்ணறிவு இயங்க மிகப் பெரிய மின்சார, மின்னணுக் கட்டுமானம் தேவை. பல மில்லியன் டாலர் முதலீடு இருந்தால் மட்டும் தான் இவையெல்லாம் சாத்தியம்.
- அப்படிப்பெரும் தொகையைக் கொட்டி இந்த மென்பொருளை உருவாக்க ஒரே காரணம். இனிவெறும் தகவல் மட்டும் போதாது, தகவலைப் பகுத்தாய்ந்து சரியான நோக்கத்தைத் கணிக்கும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளுக்குத்தான் சந்தை, லாபம் எல்லாம்!

**தந்திரமான வழிமுறை**

- அடுத்ததாக, உரையாடல் மென்பொருள்கள் உங்களின் அந்தரங்கத் தகவலைப் பெறப் பயிற்றுவிக்கப்படலாம். ஏற்கெனவே உங்களின் தகவலைச் சேகரிக்கும் நிறுவனங்கள் உங்களின் அந்தரங்கத் தகவலைச் சேகரிக்கப் படாதபாடுபடுகின்றன.
- ஆனால், உரையாடல் ஏ.ஐ, அந்த வேலையை மிக எளிதாகச் செய்துவிடும்.

**செய்ய வேண்டியது என்ன?**

- இந்த டிஜிட்டல் யுகத்தில் அரசியல் கட்சிகள் நவீன இணையத் தொழில்நுட்பங்கள் சமூக வலைதளங்களைப் பரப்புரைக்காகப் பயன்படுத்துகின்றன.
- அதேநேரம், தேர்தல் வியூகம் என்னும் பெயரில் பொய்ச் செய்திகள், வெறுப்பை உமிழும் செய்திகள்.
- அவதூறுப் பிரச்சாரம் செய்வதை ஓர் அரசியல் உத்தியாகவே சில கட்சிகள் வைத்திருக்கின்றன. அவர்களிடம் இந்த நோக்கக் கணிப்பு பற்றிய தகவல்கள் கிடைத்தால், போலிச் செய்திகள், வெறுப்புப் படங்கள், அவதூறுக் காணொளிகளைச் கச்சிதமாக உருவாக்கி மக்களைக் குழப்ப நிறைய சாத்தியம் உள்ளது.
- ஏ.ஐ. தொழில்நுட்பம் நாள்தோறும் வளர்ந்து, மனிதர்களின் எண்ணங்கள்– உள்நோக்கங்களை முன்னறிவித்து, அவற்றைச் செயல்படுத்தும் திறனைப் பெறுகிறது.
- ஒருகட்டத்தில், மக்களின் தனியுரிமைக்கும் சுயமுயற்சிக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு கருவியாகவும் இது மாறக்கூடும.
- ஆகவே, நம்முடைய இணையச் செயல்பாடுகளை உரிய விழிப்புணர்வுடன் அணுகுவதும், ஏ.ஐ. தொழில்நுட்பம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றிய அறிவையும் சிந்தனையையும் வளர்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியம்.
- நோக்கப் பொருளாதாரம் என்னும், புதிய ஆபத்தைப் பற்றி இந்திய அரசு ஒரு கொள்கை முடிவெடுக்க வேண்டும். இது தொடர்பாகத் தேர்தல் ஆணையமும், உரிய விவாதங்களை மேற்கொண்டு ஒரு மகத்தான நவீனத் தொழில்நுட்பத்தை அரசியல் கட்சிகள் தவறாகப் பயன்படுத்தாதவாறு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்!